# யா/அச்சுவேலி மத்திய கல்லூரி

## வருடாந்த பரிசில் நாள் – 2016

காலம்:– 09.09.2016 வெள்ளிக்கிழமை பி.ப 2.15

இடம்:– கல்லூரித் திறந்த வெளி அரங்கு

தலைமை:– திரு.சி.திரிகரன் (அதிபர்)

**பிரதம விருந்தினர்கள்**

**Dr.மார்க்கண்டு குழந்தைவேலு**

MBBS.(Cey), D.R.C.O.G (Lon), DFSRH (Lon), DCH (Lon)

(குடும்ப வைத்திய நிபுணர், பழையமாணவன்)

**திரு.வைத்திலிங்கம் சதானந்தன்,**

B.Sc.Eng (Cey), P.Eng.(Can); C.Eng (UK)

(பொறியியலாளர்–கனடா, பழையமாணவன்)

**சிறப்பு விருந்தினர்**

**திரு.நா.சிவநேசன்**

(கோட்டக்கல்விப்பணிப்பாளர், கோப்பாய்.)

**கௌரவ விருந்தனர்**

**திரு.மாணிக்கம் சிவமூர்த்தி,**

(உரிமையாளர் வீடியோ கலாமினி, அச்சுவேலி.)

**பரிசில் வழங்கல்**

**Dr.அஞ்சலா குழந்தைவேலு**

(கண் மருத்துவவியல் –லண்டன்)

# அதிபர் அறிக்கை

**(01.01.2015 - 08.09.2016)**

எமது அன்பான அழைப்பை ஏற்று எமது கல்லூரியின் பரிசில் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக சிறப்பித்துக் கொண்டிருக்கும் வைத்திய கலாநிதி மார்க்கண்டு குழந்தைவேலு அவர்களே அவர் தம் பாரியார் வைத்திய கலாநிதி அஞ்சலா குழந்தைவேலு அவர்களே பொறியியலாளர் திரு.வைத்திலிங்கம் சதானந்தம் அவர்களே சிறப்பு விருந்தினராக வருகை தந்துள்ள கோப்பாய்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு.நா.சிவநேசன் அவர்களே கௌரவ விருந்தினராகச் சிறப்பித்துக் கொண்டிருக்கும் வீடியோ கலாமினி உரிமையாளர் திரு.மாணிக்கம் சிவமூர்த்தி அவர்களே இப்பாடசாலையின் முன்னாள் அதிபர்களே முன்னாள் ஆசிரியர்களே அயற் பாடசாலை அதிபர்களே அயற் பாடசாலை ஆசிரியர்களே எமது கல்லூரியின் பிரதி அதிபர்களே ஆசிரியர்களே பாடசாலை அபிவிருத்திக்குழு உறுப்பினர்களே பழைய மாணவர் சங்க உறுப்பினர்களே பழைய மாணவர்களே நலன் விரும்பிகளே பெற்றோர்களே கல்வி சாரா ஊழியர்களே அன்புக்குரிய மாணவச் செல்வங்களே அனைவருக்கும் அன்பான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன். உங்கள் எல்லோரினதும் வருகையால் அச்சுவேலி மத்திய கல்லூரி அன்னை பெருமை அடைகிறாள்.

பிரதம விருந்தினர்களாகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் வைத்திய கலாநிதி மார்க்கண்டு குழந்தைவேலு அவர்களும், பொறியியலாளர் வைத்திலிங்கம் சதானந்தம் அவர்களும் எமது பாடசாலையின் பழைய மாணவர்கள். பாடசாலையில் மிகவும் பற்றுள்ளவர்கள். பாடசாலைக் காலத்திலேயே திறமை மிக்கவர்களாக விளங்கியவர்கள். ஏனைய மாணவர்களுக்கு முன்னுதாரணமாக விளங்கியவர்கள்.

வைத்திய கலாநிதி குழந்தைவேலு அவர்கள் எமது கல்லூரியில் க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் மிகச்சிறந்த பெறுபேற்றைப் பெற்று தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியில் உயர்தரத்தில் விஞ்ஞானப் பிரிவில் பயின்று பேராதனைப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்குத் தெரிவு செய்யப்பட்டார். மருத்துவப்பட்டம் பெற்ற பின் காலி, புத்தளம், பதுளை ஆகிய இடங்களில் உள்ள வைத்தியசாலைகளில் மகப்பேற்று வைத்திய நிபுணராகப் பணிபுரிந்தார். நைஜீரியா, ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளிலும் மகப்பேற்று வைத்திய நிபுணராகப் பணிபுரிந்தார். மேலும் குழந்தை வைத்தியம், குடும்ப வைத்தியம் என்பவற்றில் உயர்படிப்பை மேற்கொண்டவர் ஆவார்.

பொறியியலாளர் வைத்திலிங்கம் சதானந்தம் அவர்கள் எமது கல்லூரியில் க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் மிகச்சிறந்த பெறுபேற்றைப் பெற்று பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் கணிதப் பிரிவில் பயின்று பேராதனைப் பல்கலைக்கழகப் பொறியியல் பீடத்திற்குத் தெரிவு செய்யப்பட்டார். பொறியியல் பட்டம் பெற்று ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்திசபை (எம்பிலிப்பிட்டிய), காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை ஆகியவற்றில் பொறியியலாளராகப் பணிபுரிந்தார். 1990 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் வரை கனடா நாட்டில் பொறியியலாளராக பணிபுரிந்தார்.

இத்தகைய சிறந்த கல்விமான்கள் எமது கல்லூரி அன்னை ஈன்றெடுத்த புதல்வர்கள் என்பது எமக்குப் பெருமையான விடயமாகும். இவர்கள் எமது பாடசாலை மைதான விஸ்தரிப்புக்காகக் காணி கொள்வனவு செய்யப்பட்ட போது பெருந்தொகையான நிதியை வாரி வழங்கிய வள்ளல்கள் ஆவார். இப்பெருந்தகைகளின் கரங்களினால் எமது மாணவர்கள் பரிசு பெறுவது மிகவும் பெருமை மிக்கதாகும்.

இன்றைய விழாவின் சிறப்பு விருந்தினர் கோப்பாய்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு.நா.சிவநேசன் அவர்கள் தனது ஆரம்ப, இடைநிலைக் கல்வியை கொக்குவில் இந்துக் கல்லூரியில் கற்றுக் கொண்டார். யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டத்தையும், தேசிய கல்வி நிறுவகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவையும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முதுகல்வி மாணிப் பட்டத்தையும் பெற்றுக் கொண்டார்.

இவர் 25.03.1990 ஆம் ஆண்டு தனது ஆசிரிய சேவையை ஆரம்பித்து வலிகாம வலயத்தில் பல பாடசாலைகளில் தனது ஆசிரிய சேவையைத் திறம்பட ஆற்றினார். இவ்வேளையில் 01.01.1998 தொடக்கம் அதிபர் சேவைக்கு உயர்வு பெற்று வலிகாமம் வலயத்தில் பல பாடசாலைகளில் அதிபராகச் சேவையாற்றினார். 02.07.2015 தொடக்கம் யாழ்ப்பாண கல்வி வலயத்தின் கோண்டாவில் இந்துக் கல்லூரியில் கடமையாற்றி வரும் வேளையில் 08.06.2016 தொடக்கம் கோப்பாய்க் கோட்டக் கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்று சேவையாற்றி வருகின்றார். இவர் கோப்பாய்க் கல்விக் கோட்டத்தின் வளர்ச்சிக்காகத் தன்னையே அர்ப்பணித்து சேவையாற்றி வருகின்றார். அவரையும் இந்த வேளையில் வருக வருகவென வரவேற்பதில் பெருமகிழ்வு அடைகின்றேன்.

கௌரவ விருந்தினர் திரு.மாணிக்கம் சிவமூர்த்தி அவர்கள் இப்பாடசாலையின் பழைய மாணவன். அச்சுவேலியைச் சேர்ந்தவர். தனது கல்வியை நிறைவு செய்து யாழ் குடா நாட்டில் வீடியோ துறையில் மூன்றாவதாக வீடியோ கலாமினி என்ற நிறுவனத்தை ஆரம்பித்த பெருமைக்குரியவர். வீடியோ என்றால் அது கலாமினி என்று சொல்லுமளவுக்கு புகழ்வாய்ந்த நிறுவனம். அத்துடன் யாழ் குடா நாட்டில்

முதன் முதலில் பந்தல் சேவையை ஆரம்பித்ததும் இவரே என்பதும் குறிப்பிடத்தக்கது. இவரது தாய் தந்தை நினைவாக இராஜமாணிக்கம் கல்யாணமண்டபம் 2006இல் இவரால் ஆரம்பிக்கப்பட்டது.

வருடந்தோறும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களைக் கௌரவித்தல், அச்சுவேலிப்பிரதேசத்தில் கல்வி கற்று மருத்துவ பீடத்திற்குத் தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு உதவுதல் ஏழை மாணவர்களுக்கு உதவுதல்,பொது நிகழ்வுகளுக்குச் சலுகை அடிப்படையில் பந்தல் சேவை வழங்குதல் போன்ற பல்வேறு அறப்பணிகளைப் புரிந்து வருகின்றார். எமது பாடசாலைக்கும் சிறப்பாகப் பல வழிகளில் உதவிவருகின்றார். அவர்களையும் வரவேற்பதில் பெருமகிழ்வு அடைகின்றேன்.

வைத்திய கலாநிதி (திருமதி) அஞ்சலா குழந்தைவேலு அவர்கள் வைத்தியராகச் சிறப்பாகப் பணியாற்றி வருகிறார். இன்று எம் மாணவர்களுக்கு பரிசில்களை வழங்க உள்ளார். அவர்களையும் வரவேற்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

## அறிமுகம்

1892 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட எமது கல்லூரி அன்னை 124 ஆவது ஆண்டில் பயணிக்கிறாள். இக்காலப் பகுதியில் எமது கல்லூரி அன்னை சாதனைகளை நிகழ்த்தியபடியே தனது வளர்ச்சியைத் தொடர்கிறாள். இன்றைய பரிசில் நாள் நிகழ்வில் கல்விச் செயற்பாடுகளிலும், இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் முதன்மை இடங்களைப் பெற்ற மாணவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

எமது கல்லூரியின் மகுடவாசகம் "என்றும் ஒளிரும் தீபம்" என்பதாகும். இவ்வகையில் எமது கல்லூரியானது இப்பிரதேச மாணவர்களுக்குக் கல்வி என்னும் ஒளியை வழங்கி அவர்களின் வாழ்க்கைக்கு வழிகாட்டுகிறது என்பதில் சந்தேகமில்லை. அச்சுவேலி, பத்தமேனி, தம்பாலை, கதிரிப்பாய், தோப்பு, நவற்கிரி, ஆவரங்கால் போன்ற பல்வேறு பிரதேச மாணவர்கள் இங்கு கல்வி கற்கின்றார்கள். இம்மாணவர்களின் கல்வி வளர்ச்சியினை நோக்காகக் கொண்டே இப்பாடசாலை செயற்படுகின்றது.

2012 ஆம் ஆண்டில் ஆயிரம் பாடசாலைத்திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டு 1AB பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டது. இதனால் கணித விஞ்ஞான பாடநெறிகளினை உயர்தரத்தில் கற்கக்கூடிய வசதி ஏற்படுத்தப்பட்டது. மேலும் "அண்மித்த பாடசாலை மிக நல்ல பாடசாலை" என்னும் திட்டத்தின் கீழும் தற்போது உள்வாங்கப்பட்டுள்ளமை சிறப்பான அம்சமாகும். கோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் உள்வாங்கப்பட்ட இரு பாடசாலைகளில் எமது பாடசாலையும் ஒன்றாகும். இதனால் பாடசாலையில் அதிபர் விடுதி, ஆசிரியர் விடுதி, வகுப்பறைகள் போன்ற உட்கட்டுமான வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளன. இதற்குக் காணி தேவையாக உள்ளது. எனவே பாடசாலையின் வளர்ச்சி கருதி காணியினைப் பெற்றுக் கொள்வதற்கு உதவுமாறு அனைவரையும் கேட்டுக் கொள்கின்றேன்.

## மாணவர் விபரம்

| | |
|---|---|
| தரம் 6–11 | 688 |
| க.பொ.த உயர்தரம் | 75 |
| விசேடகல்வி | 7 |
| மொத்தம் | 770 |

## புதிதாக இணைந்தோர்

### 2015 ஆம் கல்வியாண்டில் ஆசிரியர்களாக

திருமதி.றஜனி பிரதீபன் (வர்த்தகம்), திருமதி.தர்சினி கேமலதாஸ் (தமிழ்), திருமதி.நித்தியகலா குணராஜா (சங்கீதம்), திரு.ச.முகுந்தன் (கணிதம்) திருமதி.பகீரதி கருணானந்தன் (வர்த்தகம்), திருமதி.பிரவீனா விஜிந்தன் (இந்துசமயம்) திரு.சி.சிறீரங்கன் (கணக்கீடு), செல்வி.சி.சித்ரூபா (ஆங்கிலம்), திருமதி.சுமித்திரா பிரசாத் (கணிதம்)

பாடசாலைப் பணியாளராக திரு.ப.துவாரகேசன் ஆகியோரும்

2016 ஆம் கல்வியாண்டில் பிரதி அதிபராக திரு. ஆ. விமலேந்திரன் (SLPS 2) அவர்களும் , ஆசிரியர்களாக திரு.க.ருகுணன் (பௌதீகவியல்) , திருமதி.சுதர்சலா டர்சன் (ஆலோசனையும் வழிகாட்டலும்), விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர்களாக நியமனம் பெற்று வந்த செல்வி.யதுகுலா லிங்கேஸ்வரன், செல்வி.ஷமிகா அனோஜ் லியோ மரியதாசன், திரு.ஜெயராசா இம்மானுவேல் லக்சன் , ஆய்வு கூடப்பணியாளராக திரு.க.சுரேஸ் ஆகியோரும் புதிதாக இணைந்துள்ளனர். அவர்களை வரவேற்பதுடன் அவர்களின் சேவை சிறப்பாக அமைய வாழ்த்துக்கள்.

## முகிழ்நிலை ஆசிரியர்கள்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியிலிருந்து எமது பாடசாலைக்கு முகிழ்நிலை ஆசிரியர்களாக கற்பித்தல் பயிற்சியினை சிறப்பாக நிறைவு செய்த திரு.மு.மி.மு.மிவ்ராஸ் அகமட், திரு.ம.பொன்வேல், செல்வி.மு.சுஜானி ஆகியோருக்கு நன்றியைத் தெரிவிப்பதுடன் தற்போது முகிழ்நிலை ஆசிரியர்களாகக் கடமை யாற்றுகின்ற திரு.யோ.துசாந்தன், செல்வி.தே.நர்மிதா, செல்வி.த.சிந்துஜா ஆகியோரது கற்பித்தல் பயிற்சி மிகச் சிறப்பாக அமைய வாழ்த்துக்கள்.

## இடமாற்றம் பெற்றுச் சென்றோர்

ஆசிரியர்களான திரு.வ.நவலோகநாதன், திரு.வீ.விஜயகுமார், திருமதி.அ.சரவணபவன், திருமதி. வே.முகுந்தன், திருமதி.ப.நகுலேஸ்வரன், திருமதி.வி.முத்துலிங்கம், திருமதி.சு.பிரசாத், திருமதி.த. கேமலதாஸ் ஆகியோரும் அலுவலகப் பணியாளரான திரு.இ.நெடுஞ்செழியன், சுகாதார ஊழியராக கடமையாற்றிய திரு.வ.சண்முகநாதன் காவலாளியாகத் தரமுயர்த்தப்பட்டு மாற்றலாகிச் சென்றுள்ளனர். இவர்கள் எமது பாடசாலையில் ஆற்றிய சேவைக்கு நன்றி கூறுவதுடன் புதிய பாடசாலையில் பணி சிறக்க வாழ்த்துக்கள்.

## பதவி உயர்வு பெற்றோர்

ஆசிரியர்களாகச் சிறப்பாகக் கடமையாற்றிய திரு.அ.வத்சலன், திரு.ச.முகுந்தன், திரு.க.ருகுணண் ஆகியோர் இலங்கை அதிபர் சேவை தரம் 111இல் போட்டிப் பரீட்சை மூலம் நியமனம் பெற்றுள்ளனர். இவர்கள் பணி சிறக்க எனது வாழ்த்துக்கள்.

## கல்விப் பெறுபேறு

க.பொ.த(சாதாரண) பரீட்சையில் 98 மாணவர்கள் தோற்றி 48 மாணவர்கள் சித்தி பெற்றுள்ளனர். சித்திவீதம் 49% முன்னைய ஆண்டுகளை விட சித்திவீதம் அதிகரித்து காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. க.பொ.த(உயர்தர) பரீட்சையில் 14 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி பெற்றுள்ளனர். இம்மாணவச் செல்வங்களின் வெற்றிக்கு வழிகாட்டிய ஆசிரியர்களுக்கு எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

## ஆசிரியர் கழகம்

ஆசிரியர் கழகமானது ஆசிரியர்களின் இன்ப துன்பங்களில் பங்கு கொண்டு ஆசிரியர்களிடையே நல்லுறவைப் பேணி வருகின்றது. இக்கழகத்தின் தலைவராக திரு.க.சுதாஸ்குமார், செயலாளராக திருமதி.சுஜிகலா சந்திரகுமார், பொருளாளராக திருமதி.பூமா மதியழகன் ஆகியோரும் சிறப்பாகச் செயற்படுகின்றனர்.

## பாடசாலை அபிவிருத்திக்குழு (SDC)

மேற்படி குழுவில் அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், வலய மட்டப்பிரதிநிதி ஆகியோர்கள் இணைந்து மிகவும் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றனர். பாடசாலையின் சகல நிதி விடயங்களினையும் பொறுப்பேற்றுத் திறம்பட அறிக்கைப்படுத்துகின்றது.

## பழைய மாணவர் சங்கம்

எந்த ஒரு கல்லூரியின் வளர்ச்சியிலும் முதுகெலும்பாக இருப்பவர்கள் அக்கல்லூரியின் பழைய மாணவர்கள் பாடசாலையின் வளர்ச்சிக்குப் பல்வேறு உதவிகளினை குறிப்பாக நிதியுதவிகளினைப்

பொருத்தமான சந்தர்ப்பங்களில் வழங்குகின்றனர். பழைய மாணவர் சங்கத்தின் தலைவராக முன்னாள் அதிபர் திருமதி.பு.கணபதிப்பிள்ளை அவர்களின் வழிநடத்தல் சிறப்பாக அமைகின்றது. செயலாளராக திரு. தாமரைச்செல்வன், பொருளாளராக திரு.இ.ஜெயக்காந்தன் அவர்களும் சிறப்பாகச் செயற்படுகின்றனர்.

## பௌதிக வளங்கள்

எமது பாடசாலைக்கு 19 இலட்சம் ரூபா செலவில் கல்வி அமைச்சினால் பெண்களுக்கான Wash Room அமைக்கப் பெற்றது. 20 இலட்சம் ரூபா செலவில் விஞ்ஞான ஆய்வு கூடம் E-Learning room புனருத்தாரணம் செய்யப்பட்டது. இவை எமது மாணவர்களின் கற்றல் வளர்ச்சிக்கு அவசியமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

எமது கல்லூரியின் முன்னாள் ஆசிரியர் அமரர் திரு.து.இராஜரஞ்சன் நினைவாக திருமதி. க. இராஜரஞ்சன் அவர்களினால் பரிசில் நிதியமாக 10000 ரூபா அன்பளிப்புச் செய்யப்பட்டது.

திரு.ஜெ.கஜேந்திரன் அவர்களினால் 20,000 ரூபா பெறுமதியான பெரு விளையாட்டுக்கான சீருடைகள் வழங்கப்பட்டன.

உகரம் அறக்கட்டளை தன்னார்வக் குழுவினால் திரு.ஞா.செந்தூரன் தலைமையில் க.பொ.த (சாதாரண)தரத்தில் கல்வி பயில்கின்ற 50 மாணவர்களுக்கு மாதிரி வினாத்தாள் புத்தகங்கள் வழங்கப்பட்டன.

பெற்றோரை இழந்த 15 மாணவர்களுக்கு உதவும் முகமாகப் பாதணிகள் கனடாவில் வசித்து வரும் திரு.த.வாசுதேவன் சார்பாக ஓய்வு பெற்ற ஆசிரியர் திரு.செ.பாலச்சந்திரனால் கையளிக்கப்பட்டது.

ஆவரங்காலைச் சேர்ந்த பொருளியல் ஆசிரியர் திரு.S.S சிறி அவர்கள் எமது பாடசாலை நூலகத்திற்குப் பொருளியல் நூல்களை வழங்கினார். இவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

**அன்பான பெற்றோரே**

உங்களது பிள்ளைகளுக்குக் கல்வியே மூலதனம். உங்களது பிள்ளைகள் கல்வியில் உயர்நிலை எய்துவதன் மூலம் பிள்ளைகளது எதிர்காலம் சிறப்பானதாக அமையும். எனவே உங்கள் பிள்ளைகளை ஒழுங்காகப் பாடசாலைக்கு அனுப்புவதுடன் அவர்கள் வீட்டில் பாடங்களைக் கற்பதற்கும் உரிய கவின் நிலையை உருவாக்குதல் வேண்டுமெனவும் கேட்டுக் கொள்கின்றேன்.

**தேவைகள்**

எமது பாடசாலை "அண்மையில் உள்ள பாடசாலை மிக நல்ல பாடசாலை" என்னும் திட்டத்தில் உள்வாங்கப்பட்டமையால் பெரும்பாலான பௌதிக வளத் தேவைகள் கல்வி அமைச்சினால் விரைவில் பூர்த்தி செய்யப்படும். எனினும் எமக்கு மேலும் சில தேவைகள் உள்ளன.அவையாவன

காணிக் கொள்வனவுக்கான நிதிப் பங்களிப்பு
உள்ளக ஒலிபரப்புச்சாதனம்
பரிசில் நிதியம் விஸ்தரிக்கப்படுதல்
விளையாட்டு நிதியம் ஆரம்பிக்கப்படல்.
மாணவ நலனோம்பல் நிதியம் ஆரம்பிக்கப்படுதல்.


# நன்றிகள்

எமக்கு பெரிய வளங்களைத் தந்துதவிய மத்திய கல்வி அமைச்சு, மாகாணக் கல்வி அமைச்சு, வட மாகாணக் கல்விப்பணிப்பாளர், யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர், அவரது உத்தியோகத்தர்கள் மற்றும் பழைய மாணவர்களுக்கும், நலன் விரும்பிகள் பரிசளிப்பு விழா நிதி உதவி வழங்கிய அன்பு உள்ளங்களுக்கும் நன்றிகள்.

கடல் கடந்த தேசத்தில் இருந்து பாடசாலையின் மீதான பற்றினால் எமது அழைப்பை ஏற்று கலந்து சிறப்பித்த பிரதம விருந்தினர்கள் அவர்களுக்கும் சிறப்பு விருந்தினர், கௌரவ விருந்தினர், பாடசாலையின் முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், அயற்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், எமது பாடசாலை ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், பெற்றோர்கள் அனைவருக்கும் எனது நன்றிகள்.

09.09.2016

திரு.சி.திரிகரன்
அதிபர்



## தரம் 7 (2016)

| | |
|---|---|
| 1. ஸ்ரீ.கவிப்பிரியன் | சைவசமயம், சித்திரம், சுகாதாரமும் உடற்கல்வியும், செயன்முறைத்திறன் 1 ஆம் இடம், |
| | புவியியல் 2 ஆம் இடம் |
| | தமிழ், விஞ்ஞானம், வரலாறு 3 ஆம் இடம் |
| 2. த.கவிசன் | வரலாறு, ஆங்கிலம்– 1ஆம் இடம் |
| | கணிதம், விஞ்ஞானம்– 2 ஆம் இடம் |
| 3. த. பிரவீன் | தமிழ், கணிதம், நாடகமும் அரங்கியலும் 1 ஆம் இடம் |
| | சுகாதாரமும் உடற்கல்வியும்– 3 ஆம் இடம் |
| 4. இ.சியாந் | புவியியல்–1 ஆம் இடம், சைவசமயம், குடியுரிமைக்கல்வி–3 ஆம் இடம் |
| 5 யோ.கவிதரன் | சைவசமயம், குடியுரிமை, செயன்முறைத்திறன் 2 ஆம் இடம் |
| | புவியியல்– 3 ஆம் இடம் |
| | கோட்டமட்ட சமூக விஞ்ஞானப் போட்டி – 2ம் இடம் |
| 6. ப.கபிசன் | குடியுரிமைக்கல்வி 1ஆம் இடம், |
| | வரலாறு–2ஆம் இடம் |
| 7. ச.டிலக்சனா | கத்தோலிக்கம்– 1ஆம் இடம் |
| 8. ஸ்ரீ. ருசானா | சங்கீதம்– 1ஆம் இடம் |
| 9. ச.வானுஜா | நடனம்– 1 ஆம் இடம் |
| 10 செ.விஸ்ணுகா | சுகாதாரமும் உடற்கல்வியும்– 2 ஆம் இடம் |
| 11. மோ.தனுசன் | ஆங்கிலம்– 2ஆம் இடம் |
| 12. க.விஸ்ணுகஜானா | தமிழ் 2 ஆம் இடம் |
| 13.ர.லதுர்சன் | ஆங்கிலம் 3 ஆம் இடம் |
| 14.ச.கஜன்ராஜ் | கணிதம் 3 ஆம் இடம் |
| 15.யோ. மதுமிதன் | விஞ்ஞானம் 1 ஆம் இடம், |
| | செய்முறை தொழிநுட்பம்– 3 ஆம் இடம் |
| | கோட்டமட்ட சமூக விஞ்ஞானப் போட்டி – 3ம் இடம் |
| 16. ப.சரணிகா | கோட்மட்ட ஆங்கிலதின எழுத்தாக்கப் போட்டி – 3ஆம் இடம் |
| 17. இ.சானுஜன் | கோட்ட மட்ட சதுரங்கப் போட்டி 1ம் இடம் |

## தரம் 8 (2016)

| | |
|---|---|
| 1. சி. கோகுலன் | கணிதம்– 1 ஆம் இடம், குடியுரிமை, செய்முறை– 2 ஆம் இடம் |
| 2. சி. விஜயதர்சினி | சங்கீதம் 1ஆம் இடம், சமயம்– 2ஆம் இடம், தமிழ், புவியியல், ஆங்கிலம், சுகாதாரம்,செயன்முறை–3ஆம் இடம் |
| 3. செ. துவாரகன் | விஞ்ஞானம், சித்திரம்– 1 ஆம் இடம் |
| 4. ஜெ.றோயல்ரூபன் | கத்தோலிக்கம் –1 ஆம் இடம் |
| 5 ர.சினோயா | தமிழ்– 3 ஆம் இடம் |
| 6. சி. கயாழினி | தமிழ், ஆங்கிலம், சுகாதாரம் ,புவியியல், செயன்முறை–1ஆம் இடம் வரலாறு 2ஆம் இடம், விஞ்ஞானம்– 3ஆம் இடம் கோட்டமட்ட ஆங்கில தினப் போட்டி கதை கூறுதல் 3ஆம் இடம் |
| 7. த. யதுசியா | சமயம், நாடகம் 1ஆம் இடம், தமிழ், விஞ்ஞானம்– 2ஆம் இடம் கோட்ட மட்ட பாவோதல் – 3ஆம் இடம் |
| 8. சி. கிதுசனா | சுகாதாரம் உடற்கல்வியும்– 2ஆம் இடம் |
| 9. அ.கார்த்திகேயன் | செயன்முறைத்திறன்– 3ஆம் இடம் |
| 10 பு.டிலக்சன் | கணிதம், வரலாறு,குடியுரிமை 3ஆம் இடம் |
| 11 ஆ. அபிரா | நடனம் –1 ஆம் இடம், |
| 12சி.லக்சனா | கணிதம் 2 ஆம் இடம் |
| 13 ம.மயூரதி | வரலாறு 1ஆம் இடம், புவியியல் 2ஆம் இடம், சமயம்,தமிழ்– 3ஆம் இடம் |

14 ப.திருமகள் குடியுரிமை–1ஆம் இடம்,

ஆங்கிலம்– 2ஆம் இடம்

15.கா.பானுசன் கோட்ட மட்ட உயரம் பாய்தல் 2ஆம் இடம்

**விசேட கல்வி மாணவர்கள்**

1. தே.வினுஜன்
2. ச.சங்கீத்
3. சி.வினோஜன்
4. ப.யாழவன்
5. கி.கியாளினி
6. ர.பிரணவி
7. ப.யனுசா

## தரம் 9 (2016)

01. ச. யதுசன் ஆங்கிலம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், குடியுரிமைக்கல்வி, சித்திரம், சைவசமயம் செயன்முறைத்திறன் –1ஆம் இடம், கணிதம் 2ஆம் இடம்

02. கி.நீருஜன் விஞ்ஞானம், புவியியல் –2ஆம் இடம் ஆங்கிலம், கணிதம் 3ஆம் இடம்

03. ச.இளங்கீதன் கணிதம்–1ஆம் இடம் ஆங்கிலம் –2ஆம் இடம் விஞ்ஞானம் குடியுரிமைக்கல்வி–3ஆம்இடம்

04. த. மிருஷிகா நடனம் –1ஆம் இடம் ,வரலாறு, குடியுரிமைக்கல்வி–2 ஆம் இடம்

05 ப. அனுசியா சங்கீதம் –1ஆம் இடம் தமிழ், சமயம்–2 ஆம் இடம்

06. மு.டக்சன் நாடகம் –1 ஆம் இடம் தமிழ் வரலாறு 3 ஆம் இடம்

07. சி. சஜீவன் தமிழ்–1 ஆம் இடம்

08. யோ.விந்துஜன் சுகாதாரம், உடற்கல்வி –1ஆம் இடம்

09. வே.சதுஜன் சைவசமயம் –3ஆம் இடம்

10.யோ. பிரசன்னா கத்தோலிக்கம் –1 ம் இடம்
செயன்முறைத்திறன் –2 ஆம் இடம்

11. இ.கிருசாந்தன் சுகாதாரம் உடற்கல்வி –2 ஆம் இடம்

12.ர. மதுசிகா செயன்முறைத்திறன் – 3 ஆம் இடம்

## தரம் 10 (2016)

1. ஜெ. வைஸ்ணவி சைவசமயம், ஆங்கிலம், தமிழ், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், குடியியல், செயன்முறைக்கல்வி, சங்கீதம் –1 ஆம் இடம்
கணிதம்– 2 ஆம் இடம், சுகாதாரம்– 3 ஆம் இடம்
வலயமட்ட வாசிப்போம் வெல்வோம் போட்டி 2ஆம் இடம்
கோட்ட மட்ட ஆங்கிலதின கற்பனையாக்கப் போட்டி 3ஆம் இடம்

2. சு. பிருந்தாதரன் சுகாதாரம்– 1 ஆம் இடம், வரலாறு, சைவசமயம், புவியியல்– 2 ஆம் இடம்
வலயமட்ட வாசிப்போம் வெல்வோம் போட்டி 2ஆம் இடம்
கோட்ட மட்ட சமூக விஞ்ஞானப் போட்டி 1ஆம் இடம்

| | |
|---|---|
| 3. த.யதுஷா | நடனம்– 1 ஆம் இடம், சைவசமயம் 3 ஆம் இடம் வலயமட்ட வாசிப்போம் வெல்வோம் போட்டி 2ஆம் இடம் |
| 4. ஜெ. அபிசாளினி | கத்தோலிக்கம்,–1 ஆம் இடம், செயன்முறைக்கல்வி–3 ஆம் இடம் கோட்டமட்ட சதுரங்கப் போட்டி 1ஆம் இடம் |
| 5. ஜெ. அலெக்சனா | சித்திரம்– 1ஆம்இடம், தமிழ், விஞ்ஞானம், சுகாதாரம், குடியுரிமை–2ம் இடம் ஆங்கிலம் 3 ஆம் இடம் வலயமட்ட வாசிப்போம் வெல்வோம் போட்டி 2ஆம் இடம், கோட்டமட்ட கட்டுரைப் போட்டி 3ஆம் இடம் |
| 6 ப. கோகுலராஜ் | ஆங்கிலம்– 2 ஆம் இடம், தமிழ்– 3 ஆம் இடம் வலயமட்ட வாசிப்போம் வெல்வோம் போட்டி 2ஆம் இடம், |
| 7. த.சுவன்ஜா | கணிதம் 1 ஆம் இடம், புவியியல்– 3 ஆம் இடம் |
| 8. க.சுரேகா | கணிதம் 3 ஆம் இடம் |
| 9. பா.கிருத்திகா | வரலாறு 3 ஆம் இடம் |
| 10 த. கோகுலன் | நாடகம் 1 ஆம் இடம் |
| 11. வி. யதுசன் | செயன்முறைக்கல்வி–2 ஆம் இடம் குடியுரிமை 3 ஆம் இடம் |
| 12.அ.திவ்யா | கோட்ட மட்டம் தனிநடிப்பு 3ஆம் இடம் கோட்ட மட்ட கூட்டுறவுப் போட்டி 1ஆம் இடம் |

## தரம் 11 (2016)

| | | |
|---|---|---|
| 1 | ப.கிருசானி | தமிழ் , கணிதம் , விஞ்ஞானம், இலக்கியநயம் தகவல்தொழிநுட்பம் 1ஆம் இடம்<br>ஆங்கிலம் 2ஆம் இடம், சமயம்– 3ஆம் இடம்<br>கோட்ட மட்ட ஆங்கில தின எழுத்தாக்கப் போட்டி 3ஆம் இடம் |
| 2. | சோ.சுவஸ்திகா | நடனம், வர்த்தகம்– 1 ஆம் இடம், தமிழ், சமயம்– 2ஆம் இடம்<br>கணிதம், ஆங்கிலம் 3 ஆம் இடம்<br>கோட்ட மட்ட கதாப்பிரசங்கம் 2 ஆம் இடம்<br>கோட்ட மட்ட வணிகப் போட்டி 2 ஆம் இடம்<br>கோட்ட மட்ட தமிழ்த்தின பாவோதல் 2ஆம் இடம்<br>கோட்ட மட்ட ஆங்கில தின எழுத்தாக்கப் போட்டி 2ஆம் இடம் |
| 3. | சே.பிரணவன் | ஆங்கிலம்– 1ஆம் இடம், கணிதம்– 2ஆம் இடம், தமிழ்– 3ஆம் இடம் |
| 4. | வி.அனெக்ஸ்மேருஜன் | சமயம்இவரலாறுஇபுவியியல், சித்திரம் 1ஆம் இடம் |
| 5 | ம.விபிகா | விஞ்ஞானம் 2ஆம் இடம், வரலாறு 3ஆம் இடம் |
| 6. | பா.பகியன் | வரலாறு2ஆம் இடம்<br>கோட்ட மட்ட சமூக விஞ்ஞானப் போட்டி 3ஆம் இடம் |
| 7. | சு.பிரியலக்சன் | விஞ்ஞானம் 3ஆம் இடம் |
| 8. | ப.ஜான்சிகா | சங்கீதம் 1ஆம் இடம் |
| 9 | ச.சர்மிலராஜ் | சுகாதாரம் 1ஆம் இடம் |
| 10 | சி.சிவேந்தினா | நாடகமும் அரங்கியலும் 1ஆம் இடம் |
| 11 | ஜெ.தனோஜன் | விவசாயம் 1ஆம் இடம் |
| 12 | அ.நிலக்சிகா | குடியுரிமை 1ஆம் இடம் |
| 13 | ந.வினோதினி | மனைப்பொருளியல் 1ஆம் இடம் |
| 14. | யோ.தனுசிகா | கோட்ட மட்ட கதாப்பிரசங்கம் 2ஆம் இடம் |
| 15. | வி.கேதாஜினி | கோட்ட மட்ட கதாப்பிரசங்கம் 2ஆம் இடம் |
| 16. | ர.டிலக்ஸ்ராஜ் | வலயமட்ட புத்தாக்க சிறப்புப் பரிசு – இலகுவாக வர்ணம் தீட்டும் தூரிகை |

# க.பொ.த(சா.த) பரீட்சை-2015

## அதிசிறந்த பெறுபேறு

| | | |
|---|---|---|
| 01. | செல்வன். தி. யதுசன் | 8A, B |
| 02. | செல்வன்.இ. சிறீராம் | 8A, B |

## சிறந்த பெறுபேறு

| | | |
|---|---|---|
| 03. | செல்வன். சி. லதுசன் | 7A,B,S |
| 04. | செல்வி. க. நிறோசனா | 6A,2C,S |
| 05. | செல்வன். கி. கிரிசாந்தன் | 6A,B,C,S |
| 06. | செல்வன். சி. கோகுலராஜ் | 6A2B,C |
| 07. | செல்வன். ஜெ. மதுராங்கன் | 5A2B,CS |
| 08. | செல்வன். பொ. சானுஜன் | 5A,B,C,2S |
| 09. | செல்வி.இ. பிறேமலதா | 5A,B,C,2S |
| 10. | செல்வி. த. சரண்யா | 5A,2B,C,S |
| 11. | செல்வி. சு. திவ்வியா | 5A,2B2C |
| 12. | செல்வன். சி. நிறோஜன் | 4A,3B,C,S |
| 13. | செல்வன். ர. கீர்த்திகன் | 4A,4B,S |
| 14. | செல்வன். ச. கோகுலதாஸ் | 4A,2B,2C |
| 15. | செல்வி. க. நிலக்சனா | 3A,2B,4C |
| 16. | செல்வி. க. அஜிந்தினி | 3A,2B,3C |
| 17. | செல்வன். சி. கிரிசாந் | 3A,3C,2S |

## சித்தி பெற்றோர்

18. ஜெ.ஜெனுசன்
19. க.நிலக்சன்
20.ஓ.கிசோகரன்
21. தி.கிருசாந்தன்
22.கு.உஷாந்தன்
23.ந.விதுர்சன்
24.த.தனுஸ்ராஜ்
25.சி.கிருசாந்
26.ஸ்ரீ.கஜன்
27.தெ.வேனிஸ்ரன்
28.வெ.தயன்
29.யோ.துவாகர்
30.வி.சுபத்திரன்
31. ந.சனோஜன்
32.கு.அஜித்
33.சு.கயனன்
34.க.கோகுலன்
35.க.தேவிசூரியா
36.க.யசோதினி
37.சி.கலிஸ்ரிகா
38.த.சோபிதா
39.க.விஷ்ணுபிரியா
40.தே.லக்ஷனா
41. ம.மதுஷா
42.ப.கோனிஷா
43.த.பவிதா
44.ப.ருசாணி
45.ச.கனிஸ்ராளினி
46.பூ.தர்சனா
47.தி.கிருசிகன்

**உயிரியல் (2017)**

| | |
|---|---|
| சி.சிவலோஜி | இரசாயனவியல், உயிரியல் 1ஆம் இடம் |
| | பௌதீகவியல் 2ஆம் இடம் |
| தி.பவித்திரா | உயிரியல் 2ஆம் இடம் |
| க.திலக்சனா | உயிரியல் 3ஆம் இடம் |

**கணிதப்பிரிவு (2017)**

| | |
|---|---|
| தி.திஜிதரன் | பௌதீகவியல், இணைந்த கணிதம் 1ஆம் இடம் |
| | இரசாயனவியல் 2ஆம் இடம் |
| ம.விதுசன் | இணைந்தகணிதம் 2ஆம் இடம் |
| | பௌதீகவியல், இரசாயனவியல் 3ஆம் இடம் |
| சி.கௌதமன் | இணைந்தகணிதம் 3ஆம் இடம் |

**கலை (2017)**

| | |
|---|---|
| க.கிரிதரன் | தமிழ்,புவியியல்,அரசியல் 1ஆம் இடம் |
| சி.லவண்சிகா | ICT, சித்திரம் 1ஆம் இடம் |
| | தமிழ் 3ஆம் இடம் |
| ம.சகிலா | ICT, புவியியல் 2ஆம் இடம் |
| சி.தனுபரன் | தமிழ், இந்துநாகரீகம் 2ஆம் இடம் |
| ச.விஷ்ணுராஜ் | இந்துநாகரீகம் 1ஆம் இடம் |
| | புவியியல் 3ஆம் இடம் |
| ச.டினோஜன் | அரசியல் விஞ்ஞானம் 2ஆம் இடம் |
| சி.மதுசன் | அரசியல் விஞ்ஞானம், இந்துநாகரீகம் 3ஆம் இடம் |

**உயிரியல்(2016)**

சி.சிவலக்சனன் பௌதீகவியல்

**வணிகப் பிரிவு(2016)**

ஓ.கார்த்திகா வணிககல்வி,கணக்கியல்,ICT 1ஆம் இடம்
ம.டர்சனா கணக்கியல், வணிகக்கல்வி, பொருளியல் 2ஆம் இடம்
இ.காயத்திரி பொருளியல் 1ஆம் இடம்
கணக்கியல், வணிகக்கல்வி3ஆம் இடம்
நா.மதுசிகா வணிகக்கல்வி,பொருளியல் 3ஆம் இடம்

**கலைப்பிவு(2016)**

நா.கார்த்திகா தமிழ், அரசியல் விஞ்ஞானம்.ICT 1ஆம் இடம்
த.டிலக்சிகா நடனம் 1ஆம் இடம் தமிழ்,ICT 2ஆம் இடம்
ல.கிரீசன் புவியியல் 2ஆம் இடம் இந்துநாகரீகம் 3ஆம் இடம்
பொ.ஜென்சிகா நாடகமும்அரங்கியலும் 1ஆம் இடம்
இந்து நாகரீகம் 2ஆம் இடம்
கா.பவிதா சங்கீதம் 1ஆம் இடம் புவியியல் 3ஆம் இடம்
த.நிலாயினி நடனம் 2ஆம் இடம்
சி.பவில்ராஜ் புவியியல் 1ஆம் இடம்
தே.அனுசியன் அரசியல் விஞ்ஞானம் 3ஆம் இடம்
ச.ரேஜிந்தா இந்துநாகரீகம் 3ஆம் இடம்

உ.ராம்கி — உதயன் பத்திரிகையின் 30 வது ஆண்பூர்த்தியை முன்னிட்டு நடத்தப்பட்ட சித்திரப்போட்டி–2015 மாவட்ட மட்டம்– 1ஆம் இடம் மாகாண மட்டம் 1ஆம் இடம்

எ.சாத்வினி — குண்டெறிதல் 17வயது கோட்டமட்டம் 3ஆம் இடம்
ஈட்டி எறிதல் 17வயது கோட்ட மட்டம் 1ஆம் இடம்
ஈட்டி எறிதல் 17வயது வலயமட்டம் 1ஆம் இடம்

கா.அபர்னாத் — குண்டெறிதல் 17வயது கோட்டமட்டம் 2ஆம் இடம்
ஈட்டி எறிதல் 17வயது கோட்டமட்டம் 1ஆம் இடம்
ஈட்டி எறிதல் 17வயது வலயமட்டம் 3ஆம் இடம்
பழுத்தூக்கல் வலயமட்டம் 1ஆம் இடம்
பழுத்தூக்கல் மாகாணமட்டம் 2ஆம் இடம

**எல்லே**

19 வயதிற்கு உட்பட்ட ஆண்

கோட்டமட்டம் 1ம் இடம் வலயமட்டம் 3ம் இடம்

1. ச.ஜெகிந்தாஸ்
2. யோ.தேனுஜன்
3. .வே.தயன்
4. யோ.திவாகர்
5. பி.உமாவேந்தன்
6. கா.அபர்நாத்
7. ந.யதீபன்
8. யோ.துவாகர்
9. ம.ஜதாஸ்
10. ஜெ.ஜெனுசன்
11. டயில்றெக்னோ
12. சி.சிவலக்சனன்
13. செ.அருட்குமரன்

14. சி.பபில்ராஜ்
15. சு.கோஜிதன்
16. ஜெ.ஜெலக்சன்
17. ர.மிதூஸ்
18. கா.அஜித்குமார்
19. ச.கபூசன்
20. வி.விதுர்சன்

## துடுப்பாட்டம்

19 வயதிற்கு உட்பட்ட ஆண்

கோட்டமட்டம் 3ம் இடம் வலயமட்டம் 3ம் இடம்

1. ச.ஜெகிந்தாஸ்
2. யோ.தேனுஜன்
3. .வே.தயன்
4. யோ.திவாகர்
5. பி.உமாவேந்தன்
6. ந.யதீபன்
7. யோ.துவாகர்
8. ம.ஜதாஸ்
9. ஜெ.ஜெனுசன்
10. டயில்றெக்னோ
11. சி.சிவலக்சனன்
12. செ.அருட்குமரன்
13. சு.கோஜிதன்
14. ஜெ.ஜெலக்சன்
15. ச.கபூசன்

## கரப்பந்தாட்டம்

19 வயதிற்கு உட்பட்ட ஆண்
கோட்டமட்டம் 1ம் இடம் வலயமட்டம் 3ம் இடம்

1. ச.ஜெகிந்தாஸ்
2. யோ.தேனுஜன்
3. அ.மேனுசன்
4. சி.சிவலக்சனன்
5. ச.கபூசன்
6. வ.அஜித்குமார்
7. வ.லதீபன்
8. சி.பிரசன்னா
9. சி.சிவரூபன்
10. ஸ்ரீ.வினிதன்

## கரப்பந்தாட்டம்

17 வயதிற்கு உட்பட்ட ஆண்
கோட்டமட்டம் 3ம் இடம் வலயமட்டம் 3ம் இடம்

1. வே.தயன்
2. கு.அஜித்
3. சா.சஞ்சீபன்
4. யோ.திவாகர்
5. பி.உமாவேந்தன்
6. ம.டயில்றெக்னோ
7. யோ.துவாகர்
8. சி.சிவகுமார்
9. வே.மிதுசன்
10. ஜெ.சயந்தன்
11. ம.தனுராஜ்

## பாடசாலை அபிவிருத்திக்குழு (SDC)

தலைவர் :- திரு.சி.திரிகரன் (அதிபர்)

செயலாளர் :- திரு.பொ.சகலகலாநிதி

பொருளாளர் :- திருமதி.ர.பிரதீபன்

வலயப்பிரதிநிதி :- திருமதி. சு.சிறீகாந்தன் (உதவிக்கல்விப் பணிப்பாளர்)

உறுப்பினர்கள் :- ஆசிரியர்கள்

திரு.ச.முகுந்தன்
திரு.ம.சிறிதரன்
திரு.பா.குணாகரன்
திருமதி.பு.பாலகிருஸ்ணன்
செல்வி.ந.சைலஜா

பெற்றோர்கள் –

திருமதி.ச.கவிதா
திருமதி.ந.இரட்ணேஸ்வரி
திருமதி.க.கிருஸ்ணவேணி
திரு.செ.கிருஸ்ணகுமார்
திரு.சி.சிவகுமார்

பழையமாணவர்கள்

திரு.நா.மகேந்திரராஜா
திரு. இ.ஜெயகாந்தன்

## நினைவுப்பரிசில் வழங்கியோர் விபரம்

✤ ஆசிரியர் அச்சுவேலி மத்திய கல்லூரி திருமதி.தி.இராஜவிநோதினி கணவர் அமரர் திருக்கேதீஸ்வரன் நினைவாக – 5000

✤ அச்சுவேலி திரு.ச. கெங்காதரன் தந்தை அமரர் சந்திரலிங்கம் தாய் அமரர் சரஸ்வதி நினைவாக – 5000

✤ ஆசிரியர்.அச்சுவேலி மத்திய கல்லூரி திரு. பா. இளங்கோ தந்தை புலவர் அமரர் பார்வதிநாதசிவம் நினைவாக – 2000

✤ ஆசிரியர் அச்சுவேலி மத்திய கல்லூரி திருமதி.பகீரதி கணவர் அமரர் கருணானந்தன் நினைவாக – 2000

✤ பொறியியலாளர் நிறோஜன் அச்சுவேலி நெல்லி ஞானவைரவர் கோயிலடி தந்தை அமரர் தியாகராஜா நினைவாக – 2000

✤ மினிபஸ் சங்கத்தலைவர் திரு. கி. ரவீந்திரன் தந்தை அமரர் கிருஸ்ணராஜா நினைவாக – 2000

✤ முகாமைஅலுவலர் கோப்பாய்க கோட்டம் செல்வி.உ.சிங்கையாரியரட்ணம் தந்தை அமரர் சிங்கையாரியட்ணம் தாய் அமரர் மாசிலாமணி நினைவாக – 2000

✤ செலிங்கோ லைப் இன்சூரன்ஸ் விற்பனை நிறைவேற்று அதிகாரி, பழைய மாணவர் அச்சுவேலி வடக்கு திரு.த.நிதிவண்ணன் தந்தை அமரர் தம்பிராஜா நினைவாக – 2000

✤ ஆசிரிய ஆலோசகர் யாழ்.வலயம் திரு. ந.முருகதாஸ்காந்தன் தந்தை அமரர் நவரட்ணம் நினைவாக – 2000

✤ சேவாலங்கா முல்லைத்தீவு திரு. செ. சுகுண்ராஜ் தந்தை அமரர் செல்வராசா நினைவாக – 2000

✤ அச்சுவேலி திரு. சு. செல்வச்சந்திரன் மனைவி அமரர் ஜெயகலா நினைவாக – 2000

✤ கோலா சிற்றூர்திச் சேவை அச்சுவேலி திரு. சி. செல்வரட்ணம் சகோதரர் அமரர் தர்மபாலா நினைவாக – 2000

✤ பழைய மாணவிகள் அச்சுவேலி திருமதி.வனஜா முரளிதரன் , செல்வி சைலஜா நடேசலிங்கம் தந்தை அமரர் நடேசலிங்கம் நினைவாக – 2000

✤ KDM கலர் லாப் திரு.க.சதீஸ் தந்தை அமரர் கிருஸ்ணர் தாய் அமரர் பவளம் நினைவாக – 2000

✤ சியான்ரேடர்ஸ் அச்சுவேலி திருமதி.தயானி புவிராஜா கணவர் அமரர் புவிராஜா நினைவாக – 2000

✤ அச்சுவேலி தெற்கு திருமதி.த. சாந்தம் மகன் அமரர் குட்டிரமேஸ் நினைவாக – 2000

✤ ப.தெ. அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு.வி.சிறீகாந் தாய் அமரர் பவளராணி நினைவாக – 2000

✤ பழைய மாணவர் அச்சுவேலி திரு.ந.பிரசாத் தந்தை அமரர் நடேசமூர்த்தி நினைவாக – 2000

✤ விஞ்ஞான ஆய்வுகூட உதவியாளர் திருமதி.ஜெயக்குமாரி அசோகன் தந்தை அமரர் ஜெயராஜசிங்கம் நினைவாக – 2000

✤ ஆசிரியர் அச்சுவேலி மத்திய கல்லூரி திருமதி.கஸ்தூரி நந்தகுமார் தந்தை அமரர் புவனேஸ்வரன் நினைவாக – 2000

✤ ஆசிரியர் அச்சுவேலி மத்திய கல்லூரி திரு.விநாயகமூர்த்தி ஐங்கரன் தாய் அமரர் இராசம்மா நினைவாக – 1000

✤ ஆசிரியர் அச்சுவேலி புனிததெரேசாள் மகளிர் கல்லூரி திருமதி. உதயராணி பாலசுப்பிரமணியம் தந்தை அமரர் தம்பிப்பிள்ளை நினைவாக – 1000

✤ அச்சுவேலி வடக்கு திருமதி.ந.கமலாவதி கணவர் ந.நற்குணசிங்கம் நினைவாக – 1000

✤ ஆசிரியர் அச்சுவேலி மத்திய கல்லூரி செல்வி. சி.பவானி தந்தை அமரர் சின்னையா நினைவாக – 1000

## பரிசளிப்பு விழா 2016ற்கு நிதி பங்களிப்பு செய்தோர்

| | | |
|---|---|---|
| 1. | இராஜேஸ்வரி திருமண மண்டபம் தெல்லிப்பளை | 10000 |
| 2. | இலங்கை வங்கி அச்சுவேலி | 7500 |
| 3. | கொமர்சல் வங்கி அச்சுவேலி | 5000 |
| 4. | ஹற்றன் நசனல் வங்கி அச்சுவேலி | 3000 |
| 5. | தேசிய சேமிப்பு வங்கி | 3000 |
| 6. | செலிங்கோ பொதுக்காப்புறுதி அச்சுவேலி | 2500 |
| 7. | தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கம் | 1000 |
| 8. | மயூரதி மோட்டோர்ஸ் | 1000 |
| 9. | தங்காஸ் ரேடேர்ஸ் | 1000 |
| 10. | ரகுமான் முஸ்லீம் ஹொட்டல் | 1000 |

| | | |
|---|---|
| 11. விதுஸ்ணன் குசன் வேக்ஸ் சொப் | 1000 |
| 12. ஜெ.பிரதீப் (முகாமையாளர் செலிங்கோ லைப்) | 1000 |
| 13. அச்சுவேலி வலி கிழ. வடபகுதி ப.நோ.கூ. | 750 |
| 14. விஜிதா அரிசிஆலை | 500 |
| 15. மயூரதி டிங்கரிங் கராஜ் | 500 |
| 16. செல்வம் சலூன் | 500 |
| 17. துளசி பான்சி | 500 |
| 18. ராஜன் பான்சி சொப் | 500 |
| 19. கல்பன ஸ்ரோர்ஸ் | 500 |
| 20.யதாஸ் ஹொட்டல் | 500 |
| 21. ராஜன் ஸ்ரூடியோ | 500 |
| 22.சாளினி புக்சொப் | 500 |
| 23.தரன்சியா கடைச்சல் | 500 |
| 24.குமார் ரயர்ஸ் வேக்ஸ் | 500 |
| 25.SD மொபைல் | 500 |
| 26.S.சத்தியமூர்த்தி குட்டி வெல்டிங் | 500 |
| 27.எபர் பியூட்டி பார்லர்(சிந்துஜா) | 500 |
| 28.பால்ராஜ் டெயிலரிங் | 500 |
| 29.விமலா ஸ்ரோர்ஸ் | 500 |
| 30.சூர்யா மருந்தகம் | 500 |

| | |
|---|---|
| 31.SVK எலக்ரோனிக்ஸ் | 500 |
| 32.க.குகனேஸ்வரன் | 500 |
| 33.சிவசக்தி உரக்கடை | 500 |
| 34.கணேசன் மில் | 500 |
| 35.சிறீ முருகன் ஹாட்வெயார் | 500 |
| 36.டொப் செலக்சன் புடவைக்கடை | 500 |
| 37.ராணி சலூன் | 500 |
| 38.சானுஜாஸ் புடவைக்கடை | 500 |
| 39.விகாஸ் | 500 |
| 40.அபிநயா பான்சி | 500 |
| 41.ஹப்பி ஜீவல்லறி | 500 |
| 42.செல்வா ஹொட்டல் | 500 |
| 43.கவின் உணவகம் | 500 |
| 44.நந்தன் வெல்டிங் | 400 |
| 45.க.நிசாந்தன் | 300 |
| 46.மா.சற்குணராஜா | 300 |
| 47.க.பாலகுமார் | 300 |
| 48.நிதீபன் மில் | 300 |
| 49.ரீ.எம் சுஜீ வர்த்தக நிலையம் | 300 |

| | |
|---|---|
| 50.எஸ்.நடராஜா | 250 |
| 51.எஸ்.ரஜனி | 200 |
| 52.இரத்தினம் மயூரன் | 200 |
| 53.றதனி மோட்டோர்ஸ் | 200 |
| 54.மனோஜ் ரேடர்ஸ் | 200 |
| 55.சபா மல்ரி ரேடடர்ஸ் | 200 |
| 56.ரீ.தனராஜன் | 200 |
| 57. சந்தோஸ்கடை | 150 |
| 58. துரைராஜா லோன்றி | 100 |

| | |
|---|---|
| வீடியோ கலாமினி (SMT) | பந்தல் சேவை |
| குமார் | பந்தல் சேவை |
| ஜீ.வீ. நெற்கொம் | மின்பிறப்பாக்கி சேவை |

## நிகழ்ச்சி நிரல்

- விருந்தினர்களை அழைத்து வருதல்
- மங்கல விளக்கேற்றல்
- இறைவணக்கம்
- தேசிய கொடியேற்றல் –தேசியகீதம்
- கல்லூரிக் கொடியேற்றல்– கல்லூரி கீதம்
- வரவேற்பு நடனம்
- அதிதிகளை மேடைக்கு அழைத்து வரல்
- வரவேற்புரை
- பரிசில் நாள் அறிக்கை
- பரிசில் வழங்கல்
- பழைய மாணவர் சங்கத் தலைவர் உரை
- கௌரவ விருந்தினர் உரை
- சிறப்பு விருந்தினர் உரை
- பிரதம விருந்தினர்கள் உரை
- நன்றியுரை
- கலைநிகழ்ச்சிகள்

1.குழுப்பாடல்

2.ஆங்கில நடனம்

3.தீப நடனம்

4.கல்லூரிக்கீதம்

5.கொடியிறக்கம்

# கல்லூரிக் கீதம்

அச்சுவேலி மத்திய கல்லூரி அன்னையே வாழி
இச்செகத்தில் கல்விகலை இன்பமுடன் ஊட்டும் எங்கள்
(அச்சுவேலி)

மெச்சு தமிழ் பண்புடனே பண்பாடும் நல்கியே
அச்சமின்றி வாழ்ந்திடவே அறிவொளியை ஊட்டும் எங்கள்
(அச்சுவேலி)

எழுத்தறி வித்திடும் இறைவனைப் பணிகுவோம்
வழுத்தியே வாழ்த்துவோம் வாழும் கல்வி ஊட்டுவாள்
பழுத்திடும் செந்தமிழ் பழச்சுவை மாந்துவோம்
செழித்திடும் மெஞ்ஞானம், விஞ்ஞானம் நல்குவாள்
(அச்சுவேலி)

ஒன்று எட்டு ஒன்பதிரண்டு ஒருங்கிணைந்த ஆண்டிலே
அன்றொளிர்ந்த தீபமே அறிவுதரும் நிலையமே
அதிபர் ஆசிரியரை அனுதினம் பணிகுவோம்
துதி செய்தே என்றும் நாங்கள் இனிய கீதம் பாடுவோம்
(அச்சுவேலி)

தர்சா தமிழ்ப் பதிப்பகம் ,ஆவரங்கால் சந்தி அச்சுவேலி.021 205 8206.